## 1. விழுப்புரம் மாவட்டம், உளுந்தூர்பேட்டை கஸ்தூர்பா காந்தி பாலிகா வித்யாலயாவிற்கு (KGBV) கட்டிடம் கட்டுதல்

கல்வியில் பின்தங்கிய ஒன்றியங்களிலுள்ள பள்ளிச் செல்லாப் பெண் குழந்தைகள் மற்றும் இடைநின்ற பெண் குழந்தைகளுக்கு அனைத்து வசதிகளுடன் கூடிய தரமான கல்வி கற்க வாய்ப்பளிக்க வேண்டும் என்ற நோக்கத்துடன், 61 கஸ்தூர்பா காந்தி பாலிகா வித்யாலயா உண்டு உறைவிடப்பள்ளிகள் செயல்பட்டு வருகின்றன. இந்த 61 பள்ளிகளில், 60 பள்ளிகள் சொந்த கட்டிடங்களில் இயங்கி வருகின்றன. விழுப்புரம் மாவட்டம், உளுந்தூர்பேட்டை கஸ்தூர்பா காந்தி பாலிகா வித்யாலயா மட்டும் தனியார் கட்டிடத்தில் தற்போது இயங்கி வருகிறது. **மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின் பேரில்,** இக்கல்வியாண்டில் விழுப்புரம் மாவட்டம், உளுந்தூர்பேட்டை கஸ்தூர்பா காந்தி பாலிகா வித்யாலயாவிற்கு **60 இலட்சம் ரூபாய் செலவில்** சொந்த கட்டடம் கட்டித் தரப்படும்.

## 2. இடைநின்ற பெண் குழந்தைகளுக்குச் சிறப்புப் பயிற்சி அளித்தல்

கஸ்தூர்பா காந்தி பாலிகா வித்யாலயாவில் எட்டாம் வகுப்பு வரை பயின்று, கல்வியைத் தொடராமல் இடைநின்ற **152 பெண் குழந்தைகள்** கண்டறியப்பட்டுள்ளனர். இவ்வாறாக கண்டறியப்பட்ட **பெண் குழந்தைகளுக்கு, 38 இலட்சம்** ரூபாய் செலவில் சிறப்புப் பயிற்சிகள் அளிக்கப்பட்டு, அவர்களின் வயதிற்கேற்ற வகுப்புகளில் அருகாமையில் உள்ள பள்ளிகளில் இடைநிலைக் கல்வியை தொடரும் பொருட்டு சேர்க்கப்படுவர்.

## 3. பள்ளிகளுக்கு விளையாட்டுச் சாதனங்கள் வழங்குதல்

கல்வியில் மட்டுமல்லாது விளையாட்டிலும் மாணவர்கள் சிறந்து விளங்க வேண்டும் என்பதில் ஆணித்தரமான நம்பிக்கை கொண்டுள்ள **மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்,** பள்ளிகளில் சதுரங்கப் போட்டிகளை அறிமுகப்படுத்தியுள்ளார்கள். **2013–2014**ஆம் கல்வியாண்டில் முதன்முறையாக விளையாட்டுத் தொடர்பான நடவடிக்கைகளை ஊக்குவிக்கும் பொருட்டு 10 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்துள்ளார்கள். அதன் தொடர்ச்சியாக, **2014–2015**ஆம்

கல்வியாண்டில் **100** அரசு உயர்நிலைப் பள்ளிகளுக்கு **20 இலட்சம் ரூபாய்** செலவில் விளையாட்டுச் சாதனங்கள் வழங்கப்படும்.

**4. பெண் குழந்தைகளுக்குக் கராத்தே பயிற்சி அளித்தல்**

**மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்**, குழந்தைகள் மற்றும் பெண்கள் பாதுகாப்பு, நலன் மற்றும் அவர்களின் நல்வாழ்வில் மிகுந்த அக்கறை கொண்டு பல முன்னோடித் திட்டங்களை தீட்டி அவற்றை சிறப்பாக செயல்படுத்தி வருகிறார்கள். இதன் தொடர்ச்சியாக, **2014–2015**ஆம் கல்வியாண்டில் பெண் குழந்தைகள் குறிப்பாக பழங்குடியினத்தைச் சார்ந்த பெண் குழந்தைகள் தங்களைக் தற்காத்துக்கொள்ள வழிவகை செய்யும் பொருட்டு பழங்குடியினர் அதிகம் வசிக்கும் நீலகிரி, நாமக்கல், சேலம், திருவண்ணாமலை மற்றும் தருமபுரி ஆகிய **5** மாவட்டங்களில் உள்ள **482** அரசுப் பள்ளிகளில் பயிலும் **4,782 பெண் குழந்தைகளுக்குக்** கராத்தே பயிற்சி **14 இலட்சம் ரூபாய் செலவில்** அளிக்கப்படும்.

**5. கல்வியில் பின்தங்கியுள்ள ஒன்றியங்களில் உள்ள 9ஆம் வகுப்புப் பயிலும் நலிவுற்ற வகுப்பைச் சார்ந்த மாணவ, மாணவியர்களுக்குச் சிறப்புப் பயிற்சி அளித்தல்**

கல்வியில் பின்தங்கியுள்ள ஒன்றியங்களில் மாதிரிப்பள்ளிகள் மற்றும் பெண்கள் விடுதிகள் கட்டி முடிக்க **141.91** கோடி ரூபாயை பெருந்தன்மையுடன் அளித்த **மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்பேரில்**, நடப்புக் கல்வியாண்டில், இவ்வொன்றியங்களில் உள்ள பள்ளிகளில் **9**ஆம் வகுப்பு பயிலும் நலிவுற்ற வகுப்பைச் சார்ந்த **32,563 மாணவ, மாணவியர்களுக்கு** அவர்களின் செயல்திறன்களை மேம்படுத்தும் பொருட்டு **1.63 கோடி ரூபாய்** செலவில் சிறப்புப் பயிற்சி அளிக்கப்படும்.

**6. அறிவியல் கண்காட்சி**

மாணவர்களிடையே அறிவியல் மனப்பான்மையை ஊக்குவிப்பதற்காகவும், அறிவியல் திறன்களை வளர்ப்பதற்காகவும் அனைத்து மாவட்டங்களிலும் அறிவியல் கண்காட்சிகள் நடத்த **மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்** ஆணையிட்டுள்ளார்கள். அதனடிப்படையில், தமிழ்நாட்டில் **2014–2015**ஆம் கல்வியாண்டில் **32**

மாவட்டங்களிலும் **அறிவியல் கண்காட்சி 32 இலட்சம் ரூபாய்** செலவில் நடத்தப்படும்.

**7. மாற்றுத் திறனாளி குழந்தைகளுக்கான உள்ளடங்கிய இடைநிலைக் கல்வி வழங்க சிறப்பு ஆசிரியர்கள் நேரடி நியமனம் மூலம் நியமித்தல்**

**மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்,** மாற்றுத் திறன் கொண்ட அனைத்து குழந்தைகளுக்காகவும், பெற்றோர்களுக்காகவும் நாட்டிலேயே முதன் முறையாக மாநில ஆதார வள மையம் (State Resource Centre) அமைத்துள்ளார்கள். இதன் தொடர்ச்சியாக அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் பயிலும் மாற்றுத் திறனாளி குழந்தைகளுக்கான உள்ளடங்கிய இடைநிலைக் கல்வித் திட்டத்தின்கீழ், தரமான கல்வி வழங்கும் பொருட்டு, **5.35 கோடி** ரூபாய் செலவில் **202 சிறப்பு ஆசிரியர் பணியிடங்கள்** தோற்றுவிக்கப்படும். இவ்வாசிரியர் பணியிடங்கள் ஆசிரியர் தேர்வு வாரியத்தின் மூலம் நிரப்பப்படும்.

**8. தலைமை ஆசிரியர்களுக்கான சிறப்புப் பயிற்சி அளித்தல்**

**மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், 2012ஆம் ஆண்டு** ஆசிரியர் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி இயக்ககத்தை மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனமாகத் தரம் உயர்த்தி ஆணையிட்டார்கள். அந்நிறுவனத்தின் வாயிலாக ஆசிரியர்களுக்கென பணியிடைப் பயிற்சிகள் நடத்தி மாணவர்கள் தரமான கல்வி பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது. இதன் தொடர்ச்சியாக நடப்புக் கல்வியாண்டில் தலைமை ஆசிரியர்களின் கல்வி மற்றும் நிர்வாகத்திறனை மேம்படுத்தும் பொருட்டு **1,140 உயர்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்கு, 55 இலட்சம்** ரூபாய் செலவில் சிறப்பு பயிற்சி அளிக்கப்படும்.

**9. இரண்டு சட்ட அலுவலர் பணியிடங்கள் தோற்றுவித்தல்**

**மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்** கடந்த மூன்றாண்டுகளில், நிர்வாக நலனைக் கருத்தில் கொண்டு பள்ளிக் கல்வித் துறைக்கென **20,025** ஆசிரியர் அல்லாத பணியிடங்களை அனுமதித்துள்ளார்கள். இதன் தொடர்ச்சியாக, மதுரையைத் தலைமையிடமாகக் கொண்டு

சென்னை உயர்நீதிமன்றத்தின் மதுரைக் கிளையில் தொடரப்படும் பள்ளிக்கல்வித் துறையைச் சார்ந்த வழக்குகளில் நடவடிக்கை மேற்கொள்ள ஒரு சட்ட அலுவலர் பணியிடமும், ஆசிரியர் தேர்வு வாரியம் சார்ந்த வழக்குகளில் நடவடிக்கை மேற்கொள்ள ஒரு சட்ட அலுவலர் பணியிடமும் ஆக மொத்தம் புதிதாக **இரண்டு சட்ட அலுவலர்** பணியிடங்கள் தோற்றுவிக்கப்படும்.

**10. ஆசிரியர் மற்றும் ஆசிரியரல்லாத காலிப்பணியிடங்கள் நிரப்புதல்**

மாணவர்களுக்குத் தரமான கல்வி வழங்க ஆசிரியர்கள் தேவை என்பதை உணர்ந்து, **மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்,** கடந்த மூன்று ஆண்டுகளில் 71,708 ஆசிரியர் பணியிடங்களை அனுமதித்துள்ளார்கள். இதன் தொடர்ச்சியாக 2014–2015ஆம் கல்வியாண்டில், **3,459** ஆசிரியர் பணியிடங்களும், **75** ஆசிரியர் சார்ந்த பணியிடங்களும், செம்மையான நிர்வாகத்திற்காக **340** ஆசிரியர் அல்லாத பணியிடங்களும் நிரப்பப்படும்.

| வரிசை எண் | ஆசிரியர் பணியிடங்கள் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | முதுகலை ஆசிரியர் | 952 |
| 2. | பட்டதாரி ஆசிரியர் | 2,489 |
| 3. | உடற்கல்வி இயக்குநர் | 18 |
| | **மொத்தம்** | **3,459** |

| வரிசை எண் | ஆசிரியர் சார்ந்த பணியிடங்கள் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | முதுநிலை விரிவுரையாளர் (SCERT) | 15 |
| 2. | விரிவுரையாளர் (SCERT) | 40 |
| 3. | இளநிலை விரிவுரையாளர் (SCERT) | 20 |
| | **மொத்தம்** | **75** |

| வரிசை எண் | ஆசிரியர் அல்லாத பணியிடங்கள் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | உதவியாளர் | 152 |
| 2. | இளநிலை உதவியாளர் | 188 |
| | **மொத்தம்** | **340** |

**11. அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் பணிபுரியும் காவலர்களுக்கு விடுமுறைக் காலத்தினைக் கணக்கில் எடுத்துக் கொண்டு ஈட்டிய விடுப்பு வழங்குதல்**

அனைத்து உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் பணிபுரியும் தலைமை ஆசிரியர்கள் மற்றும் இளநிலை உதவியாளர்கள் கோடை விடுமுறையின்போதும் நிர்வாக நலன் கருதி பள்ளிக்கு வருகை புரிய வேண்டும். எனவே, இவர்கள் விடுமுறையற்ற (Non Vacation Department) பணியாளர்களாகக் கருதப்படுகின்றனர். ஆனால், ஆசிரியர்கள் விடுமுறைக் காலங்களில் பள்ளிகளுக்கு வருகை புரிவதில்லை. எனவே, இவர்கள் விடுமுறை உள்ள (Vacation Department) பணியாளர்களாகக் கருதப்படுகின்றனர். தற்போது ஆசிரியர்களைப் போன்று விடுமுறையுள்ள பணியாளர்களாக அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் பணிபுரியும் காவலர்கள் கருதப்படுகின்றனர். ஆனால், பள்ளி மற்றும் அங்கிருக்கும் தளவாடப் பொருள்களின் பாதுகாப்பு கருதி விடுமுறை நாட்களிலும் காவலர்கள் முழுநேரப் பணியில் ஈடுபடுத்தப்படுகின்றனர். எனவே, காவலர்களை விடுமுறையற்ற (Non Vacation Department) பணியாளர்களாக அறிவித்து, விடுமுறைக் காலத்தினை ஈட்டிய விடுப்பாகக் கணக்கிட்டு,

தற்போது ஓராண்டிற்கு வழங்கப்படும் 17 நாட்கள் ஈட்டியவிடுப்பினை 30 நாட்களாக உயர்த்தி வழங்கப்படும்.

## 12. நடமாடும் நூலகங்கள் அமைத்தல்

தற்போது தமிழ்நாட்டில் 10 நடமாடும் நூலகங்கள் இயங்கி வருகின்றன. **மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின்** ஆணைப்படி, நூலகத்திற்கு வர இயலாத முதியவர்கள், உடல்நலமற்றோர், இல்லத்தரசிகள் போன்றோர் புத்தகங்கள், பருவ இதழ்கள் மற்றும் நாளிதழ்களைப் படிக்கும் வகையில், வாகனங்கள் வாயிலாக தருமபுரி, திருவள்ளூர், வேலூர், நாமக்கல், ஈரோடு, திருப்பூர் மற்றும் விழுப்புரம் ஆகிய ஏழு மாவட்டங்களில் **70.00 இலட்சம்** ரூபாய் செலவில் **“நடமாடும் நூலகங்கள்”** அறிமுகப்படுத்தப்படும்.

**13. அரசின் நலத்திட்டங்களை உடனுக்குடன் அறிந்து கொள்ள பொது நூலகத் தகவல் மேசை அமைத்தல்**

பள்ளிக் கல்வித் துறையின் அனைத்து நலத்திட்டங்கள் பற்றிய முழுமையான தகவல்களைப் பொது மக்கள் எளிதாக அறிந்து கொள்ளும் பொருட்டு, கன்னிமாரா பொது நூலகத்தில் இலவசத் தொலைபேசி (Toll free) அழைப்பு எண்ணுடன் கூடிய **"பொது நூலகத் தகவல் மேசை" 26 இலட்சம்** ரூபாய் செலவில் அமைக்கப்படும்.

**14. வீட்டுக்கொரு நூலகம்**

அனைத்துக் குழந்தைகளும் புத்தங்களைப் படித்துத் தங்களது திறனை வளர்த்துக் கொள்ள வேண்டும் என்பது **மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின்** நோக்கம் ஆகும். அந்நோக்கத்தினை நிறைவேற்றும் வகையில், தமிழக அரசால் மாணவ, மாணவியர்களுக்கு வழங்கப்படும் இலவச மடிக்கணினிகளில், கன்னிமாரா பொது நூலகத்தில் மின்மயமாக்கப்பட்டுள்ள, காப்புரிமை கோர இயலாத, நாட்டுடைமை ஆக்கப்பட்ட நூல்கள், அரசு பதிப்பு நூல்கள் மற்றும் அரிய நூல்கள் **6.00 இலட்சம்** ரூபாய் செலவில் பதிவேற்றம் செய்யப்படும்.

## 15. நூல்கள் பாதுகாப்பு மையம் அமைத்தல்

நூலகங்களில் இருப்பு நீக்கம் செய்யப்படும் பழமையான, அரிய நூல்களின் ஒரு பிரதியானது, நூல் ஆராய்ச்சியாளர் மற்றும் எதிர்காலச் சந்ததியருக்கு மிகவும் பயனுள்ளதாக அமையும் வகையில் **1.50 இலட்சம் ரூபாய் செலவில்** கட்டப்படும் நூல்கள் பாதுகாப்பு மையத்தில் பாதுகாக்கப்படும். மாநிலத்தில் முதற்கட்டமாக திருச்சிராப்பள்ளி மாவட்ட மைய நூலகத்தில் **“நூல்கள் பாதுகாப்பு மையம்”** அமைக்கப்படும்.

## 16. "நூலக ஆர்வலர்" விருது வழங்குதல்

பொது நூலகங்கள் மக்களுக்கு நன்கு பயன்படும் வகையில், சராசரி மனிதரின் படிக்கும் பழக்கத்தை அதிகப்படுத்தி நூலக விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தி வரும் “வாசகர் வட்டம்” எனும் அமைப்புகளில், மாநில அளவில் நூலக இயக்கம் வளர முனைப்புடன் சிறப்பாகப் பங்காற்றும் 3 வாசகர் வட்டத் தலைவர்களுக்கு **மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்பேரில்,** இக்கல்வியாண்டு முதல் ரூ.5,000/– மதிப்புள்ள கேடயம் மற்றும் சான்றிதழென **15,000/–**

**ரூபாய்** செலவில் "**நூலக ஆர்வலர்**" விருது நூலக வார விழாவில் வழங்கப்படும்.

## 17. குழந்தைகளுக்கான விலையில்லா கற்றல் உபகரணப்பெட்டி வழங்குதல்

**மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்,** அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் 1 முதல் 10ஆம் வகுப்பு வரை படிக்கும் மாணவ, மாணவியர்களின் படிப்புத் திறனை மேம்படுத்தும் பொருட்டு, 2012–2013ஆம் கல்வியாண்டு முதல் புத்தகப்பை, கிரையான்கள், வண்ணப் பென்சில்கள், கணித உபகரணப் பெட்டி, வரைபடப் புத்தகம் உள்ளடக்கிய கற்றல் உபகரணங்களை 330.58 கோடி ரூபாய் செலவில் வழங்கி வருகிறார்கள். இதன் தொடர்ச்சியாக, மாணவர்களிடையே படிக்கும் பழக்கத்தை ஊக்குவிக்கும் பொருட்டு மாவட்ட மைய நூலகக் குழந்தைகள் பிரிவில், புதிய உறுப்பினராகச் சேரும் முதல் 100 குழந்தைகளுக்கு, அவர்களின் மனவளர்ச்சி மற்றும் படைப்பாற்றலை மேம்படுத்தும் நோக்கில், வரை உபகரணங்கள், வண்ணப் பென்சில்கள், களிமண் மற்றும் விளையாட்டுப் பொருட்கள் அடங்கிய

**"விலையில்லா கற்றல் உபகரணப் பெட்டிகள்" 64 இலட்சம் ரூபாய்** மதிப்பில் வழங்கப்படும்.

**18. தஞ்சாவூர் மகாராஜா சரபோஜியின் சரஸ்வதி மகால் நூலகத்திலுள்ள தொன்மை வாய்ந்த அரிய நூல்களை இலக்க முறையில் (Digital) பாதுகாத்தல்**

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், இந்தியாவில் உள்ள பழமையான நூலகங்களில் ஒன்றான தஞ்சாவூர் மகாராஜா சரபோஜியின் சரஸ்வதி மகால் நூலகத்திற்கான மானியத்தை 2013–2014ஆம் ஆண்டு முதல் 40 இலட்சம் ரூபாயிலிருந்து 70 இலட்சம் ரூபாயாக உயர்த்தி ஆணையிட்டுள்ளார்கள். இதன் தொடர்ச்சியாக இந்நூலகம் மற்றும் ஆய்வு மையத்திலுள்ள தொன்மை வாய்ந்த, விலைமதிப்பற்ற, அரிய நூல்கள் மற்றும் ஓலைச் சுவடிகளை, சாதாரண மக்கள் முதல் நூல் ஆராய்ச்சியாளர்கள் வரை பயன்படுத்தும் வகையில் **7.50 இலட்சம் ரூபாய்** செலவில் உருப்படம் செய்யப்பட்டு, இலக்க முறையில் (Digital) பாதுகாக்கப்படும்.